# ★ சுவிஸில் 6,200 தமிழர்களுக்கு தற்காலிக தங்குமிட அனுமதி

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 21 இதழ் 306
யாழ்ப்பாணம் புதன்கிழமை 7-12-1994

[பேர்ன்]
சுவிஸில் 6200 இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தற்காலிக தங்குமிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது, எனவே இலங்கைத் தமிழர்கள் எவரும் பதற்றப்படத் தேவையில்லை என்று சுவிஸ் அகதிகள் தொடர்பான அமைச்சர் திரு. ஆர்னோல்ட் தெரிவித்துள்ளார்.

சுவிஸில அரசியல் தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழர்களை நாடு கடத்தும் நடவடிக்கையைக் கண்டித்து

(6-ம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் பதினொருபேர் பலி

(மட்டக்களப்பு)
மட்டு. வாழைச்சேனை ஆற்றில் பயணிகள் படகுகள் மீது படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களின் தொகை, 11ஆக அதிகரித்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தின்போது படகில் சென்றவர்களில் ஐவர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டதாகவும், ஏனையவர்களைத் தேடியதில் 11 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்

(6-ம் பக்கம் பார்க்க)

# ★ புலிகளுடன் கலந்து பேசி பரிசுத்த பாப்பரசர் வரவுடன் யுத்தநிறுத்தம் அமுலுக்குவரும்

## ஆனையிறவுப் பாதையைத் திறக்கவும் முடிவு!!

[கொழும்பு]
விடுதலைப்புலிகளுடன் கலந்து பேசி பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இலங்கைக்கு விஜயம் செய்யும் போது யுத்தநிறுத்தம் ஒன்றை செய்து கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. அத்துடன் போக்குவரத்துக்காக ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. பாதுகாப்புச் சபையின் கூட்டம் கொழும்பில் நேற்று நடைபெற்ற போது இந்த முடிவுகள் எடுக்கப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

(6ம் பக்கம் பார்க்க)

## சினிமாப் படங்களுடைய கலண்டர்களுக்கு தடை

(யாழ்ப்பாணம்)
சினிமா நடிக நடிகைகளது படங்களைக்கொண்ட அனைத்து சிறிய பெரிய நாட்காட்டிகள (கலண்டர்கள்) மற்றும் வாழ்த்து மடல்கள் யாவையும் தடை செய்யப்பட்டுள்ளது என்று யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள இவ்வாறான நாட்காட்டிகள், வாழ்த்துமடல்கள் அனைத்தும் வர்த்தக நிலையங்களில் இருந்து அகற்றப்படவேண்டும் என்பதையும் சகல வணிக நிலையங்களுக்கும் அறியத்தருகின்றோம் என்றும் வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (ரி)

★ கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு விசாரணை

## குற்றப்புலனாய்வு அலுவல்கள் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)
முன்னாள் எதிர்கட்சித் தலைவர்திரு.காமினிதிஸாநாயக்கா கொல்லப்பட்ட கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு சம்பந்தப்பட்ட குற்றப் புலனாய்வு அலுவல்கள் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு சம்பந்தமான நீதி பதி விசாரணை கொழும்பு மேலதிக நீதிவான் சமபா புத்தபால முன்னிலையில்

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் ஏழு ஜே.பிக்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் சமாதான நீதவானாக ஏழுபேர் சிறிலங்கா நீதிநிர்வாக அமைச்சினால் நியமனம் பெற்றுள்ளார்கள்.

இவர்களின் நியமனம் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக நீதிநிர்வாக அமைச்சுச் செயலாளர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன் கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

★ அரசியல் காரணங்களுக்காக

## செயற்கைஉணவுத்தட்டுப்பாடு விசாரணையின்போது அம்பலம்

(கொழும்பு)
இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள செயற்கை உணவுத் தட்டுப்பாட்டை அரசாங்க கூட்டுறவு மொத்த விற்பனைத் திணைக்களத்தைச் சேர்ந்த சில உயர் அதிகாரிகளே அரசியல் நோககத்தின் நிமித்தம் மேற்கொண்டனர் என்பது தற்போதைய விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

போதிய உணவுப் பொருட்களை கையிருப்பில் வைத்திருந்த கூட்டுறவு மொத்த

(6ம் பக்கம் பார்க்க)

## பலாலி முகாமில் குண்டுச் சத்தம்

(கோப்பாய்)
பலாலி இராணுவ முகாம் பகுதிகளில், கடந்த சில தினங்களாகக் குண்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் உள்ளன.

இதேவேளை ஹெலிகொப்டர் ஒன்று இடபகுதிகளை நோக்கி வட்டமிட்டு வருகின்றது. இதனல் இப்பகுதிகளில் வசிக்கும் மககள் பெரும் பதற்றத்திற்குள்ளாகி வருகின்றனர். 166-ரி

## புதிய அரசு பதவியேற்றபின் 41 தமிழர்கள் பலி

(யாழ்ப்பாணம்)
இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் சிறிலங்காவின் புதிய அரசு பதவியேற்றது முதல் நேற்று முன்தினம் வரை, குறைந்தது 41 தமிழர்கள் சிறிலங்கா படையினரின் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

இவ்வருடம் ஜனவரி முதல் நேற்று முன்தினம் வரை 147 தமிழர்கள் படையினரின் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். -ரி

## அமைச்சர் கதிர்காமர் இன்று இந்தியபிரதமரை சந்திப்பார்

(புதுடில்லி)
வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்கமர் மூன்றுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று இந்தியா சென்றுள்ளார்.

திரு. கதிர்காமர் தமது பங்களாதேஷ் விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று இரவு புதுடில்லியை வந்தடைந்தார்

இவர் இந்திய ஜனதிபதியையும், பிரதமரையும் இன்று சந்தித்து பேச்சுக்களை நடாத்துவார்,

(6ம் பக்கம் பார்க்க)

**வரி விளம்பரம்**

**ஆங்கிலம் கணிதம் 95**

ஆண்டு 5, 6ல் இருந்து O/L வரை விசேடமாக ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். ஆசிரியர் B. Sc 85, சிவன் கோவிலடி. மணல் தறை லேன், திருநெல்வேலி.
(சி-1335)

**கணிதம் 6—G.C.E. O/L**

தனிப்பட்ட முறையில் மேற்படி வகுப்பகளுக்கு அனுபவம் பெற்ற ஆசிரியரினால் கணிதம் சிறப்பாகப்பயிற்சிகளோடு கற்பிக்கப்படும். R. பாலசுப்பிரமணியம் B. Sc. (Cey), 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி-1338)

**வைத்தியம்**

நாட்பட்ட நோய்களுக்கு திங்கட்கிழமைகளில் மட்டும் ஹோமியோபதி சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் எம். வி, தில்லைச்சந்திரன் பதிவுபெற்ற ஹோமியோபதி வைத்தியர், புகையிரத ஒழுங்கை, சாவகச்சேரி.
சி-1339

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

அரசு — புலிகளுக்கிடையில்

# கடிதப் பரிமாற்றமே தவிர பேச்சுக்கள் ஆரம்பிக்கவில்லை

(கொழும்பு)

சமாதானப் பேச்சு குறித்து இரு தரப்பும் ஐ. சி. ஆர். சி. ஊடாக கடிதப் பரிமாற்றங்களை நடத்துகின்றனவே தவிர தற்போது பேச்சுக்கள் ஆரம்பிக்கும்அறிகுறி எதுவும் தெரியவில்லை என சண்டே ஐலன்ட்' கூறியுள்ளது.

சண்டே ஐலன்ட் மேலும் கூறுகையில்: அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை வெளிநாடுகளிலுள்ள அவதானிகள் கவனித்து வருகிறார்கள். எனினும் அடுத்த சுட்ட பேச்சு குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை விடுதலைப்புலிகளின் மாவீரர் வாரத்தில் அவர்கள் படையினருக்கு எதிராக எந்தவொரு தாக்குதலையும் நடத்தாதமை சுட்டிக்டிக்காட்டப்பட்டுள்ளது. வழமையாக இந்த வாரத்தில் புலிகள் கடும் தாக்குதலை நடாத்துவதால் இம்முறை நாட்டிலுள்ள சகல படை முகாம்களிலும் படையினர் மிகுந்த உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனராம்.

எனினும் புலிகளின் தாக்குதலுக்கு படையினரும் இடம் கொடாத வகையில் நடந்து வருகிறார்களாம். இராணுவ வட்டாரங்கள் கூறுகையில், புலிகள் தமது ஆயுத பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். உதாரணமாக புலிகளுக்கு ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் ஏற்றிக்கொண்டு வரும் கப்பல் தற்போது அட்லாண்டிக்கடற் பரப்பில் வருவதாகவும் கூறியுள்ளனர்.

எனினும் இவ்வாறு ஒரு
(5ம் பக்கம் பார்க்க)

## முக்கிய அறிவித்தல்

சினிமா நடிகர், நடிகைகளின் படங்களை கொண்ட சிறிய, பெரிய நாட்காட்டி (கலண்டர்) மற்றும் வாழ்த்து மடல்கள் அனைத்தும் இன்றிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட படங்கள் வணிக நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள அனைத்து படங்களும் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

செயலாளர்.
யாழ். மாவட்ட வணிக கழகங்களின்
இணையம்
யாழ்ப்பாணம்
7-12-94 சி-1340

யாழ்ப்பாண மாநகரசபை

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1995

1995-ஆம் ஆண்டிற்கு பின்வரும் பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு யாழ்ப்பாண மாநகரசபையுடன் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு பதிவுக் கட்டணத்திற்கான
காசோலையை அல்லது காசுக்கட்டளையை
''ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்''
என்ற பெயருக்கு எழுதி அதனை விண்ணப்பத்துடன் சேர்த்து
21 – 12 – 94–ஆம் திகதிக்கு முன்னர்
கிடைக்கக் கூடியதாக எனக்கு அனுப்புதல் வேண்டும்.

அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்
★ வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 1995 ★
எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

| | பொருட்களின் விபரம் | | மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. | எழுது கருவிகள், காகிதாதிகள் | — | 100 - 00 |
| 02. | அச்சிட்ட படிவங்கள், பத்திரங்கள் | — | 100 - 00 |
| 03. | சௌக்கிய சேவைப் பொருட்கள் | — | 100 - 00 |
| 04. | பிரசவ விடுதிக்கு வெளிநாட்டு மருந்துகள் | — | 100 - 00 |
| 05. | மரப்பலகைகள் | — | 100 - 00 |
| 06. | தண்ணீர் மானிகள் | — | 100 - 00 |
| 07. | பி. வி. சி. குழாய் பொருத்திகள் | — | 100 - 00 |
| 08. | ஜி. ஐ. குழாய்கள், பொருத்திகள் | — | 100 - 00 |
| 09. | இரும்புக் கம்பிகள் | — | 100 - 00 |
| 10. | இரும்புச் சாமான்கள் | — | 100 - 00 |
| 11. | பெயின்ற் வகைகள் | — | 100 - 00 |
| 12. | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | — | 100 - 00 |
| 13. | மின்சாரப் பொருட்கள் | — | 1000 - 00 |
| 14. | ஆயுர்வேத மருந்து வகைகள் | — | 100 - 00 |
| 15. | கோலவுடைத் துணிகள், மழை அங்கிகள் முதலியன | — | 100 - 00 |
| 16. | வீதிப் பராமரிப்பு வேலைப் பொருட்கள் (கல், மணல்) | — | 1000 - 00 |
| 17. | வீதிப் பராமரிப்பு வேலைப் பொருட்கள் (பொச்சுமட்டை) | — | 100 - 00 |
| 18. | வீதி வேலைகளுக்கான டிராக்டர்களைப் பதிவு செய்தல் | — | 1500 - 00 |
| 19. | இயந்திர உபகரணம் / உதிரிப்பாகங்கள் | — | 1000 - 00 |
| 20. | ஏற்றியிறக்கும் சேவை | — | 1000 - 00 |
| 21. | தட்டெழுத்துப் பொறிகள், கூட்டல் இயந்திரங்கள், நீரிறைக்கும் இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் | — | 100 - 00 |

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் நிரலிலிருந்தே வழக்கமாகக் கூறுவிலைகள் கோரப்படும். எனினும் அவசியமாகக் காணப்படுமிடத்து வேறு வழங்குநரிடமிருந்து விலைகளைக் கோரி கொள்வனவு செய்யும் உரிமை இம்மன்றத்திற்கு உண்டு. வேண்டப்படும்போது உரிய காலத்தில் வழங்கத் தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் கோரப்பட்ட விபரங்களுக்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதனவாக இருக்கின்ற வழங்குநர்களின் பதிவுகள் அறிவித்தல் இல்லாது பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
05 - 12 - 1994.
(ஏ-4558)

பொதுமக்கள் அனைவருக்கும்
யாழ். வணிகர் கழகம் விடுக்கும்

## ஓர் அன்பான வேண்டுகோள்

உங்கள் தங்க ஆபரணங்களை நகை வணிகர் நிலையத்திற்கு விற்க வரும்போது தவறாமல் உங்கள் அடையாள அட்டையை அல்லது குடும்ப அட்டையை கொண்டுசெல்லும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி — வணக்கம்

யாழ். வணிகர் கழகம்,
யாழ்ப்பாணம். [ஏ-4570]

சாவகச்சேரி நகரசபை

## வரவு செலவுத் திட்டம் 1995

(255-ம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 1979-ம் ஆண்டின் 13-ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 ( 3 ) ஆம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட 1995ம் ஆண்டிற்குரிய வரவு - செலவுத் திட்டம் இச்சபையில் 08 - 12 - 1994-ம் திகதி தொடக்கம் ( 7 ) ஏழு நாட்களுக்கு அலுவலக நேரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி. நடராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
05 - 12 - 94.
(ஏ-4569)

நத்தார் – புதுவருடத்தை முன்னிட்டு
5-12-94 தொடக்கம் 31-12-94வரை

## மலிவு விற்பனை

★ சகலவிதமான புடவைகளுக்கும்
விசேட கழிவுண்டு.

வாடிக்கையாளர்களுக்கு
அறியத் தருகிறோம்.

## லேடன் புடவை நிலையம்

[தீவகம்]
249, இராசன் வீதி [மின்சாரநிலைய வீதி]
யாழ்ப்பாணம்.
(எ-4566)

# மலையகத்தில் மற்றொரு பிரபாகரன் தோன்றும் அபாயம் ஏற்பட்டுள்ளது

(கொழும்பு)

மலையகத்தில்தோன்றியுள்ள அமைதியின்மையை தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்கத் தவறுமானால் அங்கிருந்தும் மற்றொரு பிரபாகரன்தோன்றுவதை தவிர்க்கமுடியாதென 'சண்டே லீடர்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அம்பத்திரிகை மேலும் கூறுகையில்; மலையகத்தில் தற்போது படித்த இளைஞர்கள் மத்தியில் நிலவும்வேலைவாய்ப்பின்மை உட்பட பல பிரச்னைகளில் மலையக இளைஞர்கள் விரக்தியின் உச்சக்கட்டத்திற்கு சென்றுள்ளார்கள் இதனால் இவர்கள் தற்போது அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் இறங்க தலைப்பட்டுள்ளனர்.

இவற்றுக்கு அரசு உடனடியாக தீர்வுகாணவேண்டும் இல்லாவிடில் மலையகமும் வடபகுதிபோல் மாறிவிடும் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். இந்நிலை ஏற்படுமாயின் மலையகம் ஒரு குட்டி யாழ்ப்பாணம் போலாகிவிடும். இது நாட்டிற்கு பேராபத்தாக முடியும் எனவும் அவர் கூறினார்

இதேவேளை மலையகத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த பெருமளவு இளைஞருக்கு விடுதலைப்புலிகள் ஆயுதப் பயிற்சி வழங்குவது தெரியவந்துள்ளதாம். நுவரெலியா, நானுஓயா, தலவாக்கொல்லை, டிக்கோயா, கற்றன், மஸ்கெலியா பகுதிகளைச் சேர்ந்த 18 முதல் 26 வயது வரையான இளைஞர்கள் விடுதலைப்புலிகளிடம் இராணுவ பயிற்சி பெற்றுள்ளனர்.

மேற்படி பகுதிகளிலிருந்து புறப்படும் இளைஞர்கள் கொழும்பு வந்து அங்கிருந்து வடபகுதிக்குள் கூட்டிச் செல்லப்படுகிறார்கள். இவர்களுக்கு கிளிநொச்சியில் வைத்து புலிகளினால் இராணுவப்பயிற்சி வழங்கப்படுகிறது. மூன்று மாதங்கள் இப்பயிற்சி வழங்கப்படுவதுடன் அரசியல்ரீதியாகவும் இவர்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்படுகிறது இதன் பின் மீண்டும் இவர்கள் மலையகத்திற்கு அனுப்பப்படுகிறார்கள்.

இதுபற்றி கருத்துஎதனையும் தெரிவிக்க மறுத்த பொலிஸ் அதிகாரிகள் மலையகத்தின் தற்போதைய நிலை குறித்து தமது உயர் அதிகாரிகளிற்கு அறிக்கைகள் கொடுத்துள்ளனர் இதில் அவர்கள் மலையகத்தில் மாறிவரும் சூழ்நிலை குறித்து குறிப்பிட்டுள்ளார்

வடபகுதியில் ஆயுதப்பயிற்சி பெற்ற மலையக இலைஞர்கள் மலையகத்திற்கு வந்து பெருமளவு இளைஞர்களை தமது பக்கம் திருப்புகிறார்கள் அரசினதும், மலையக அரசியல்வாதிகளினதும் சுயநலப்போக்கினால் கொதிப்படைந்திருக்கும் இளைஞர்கள் இவர்களுக்கு தமது ஆதரவை தெரிவிக்கிறார்களாம். இது பற்றி மலையகத்திலுள்ள சில அரசியல்வாதிகளுக்கு தெரிந்திருந்தும் அவர்கள் மௌனம் சாதித்து வருகிறார்கள்.

கடந்த அக்டோபர் மாதம் கற்றனில் வைத்து இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்திய போது அவரிடமிருந்து பல தகவல்களை பொலிஸார் பெற்றுள்ளனராம். இதையடுத்து மலையகத்தை சேர்ந்த பெருமளவு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விடுதலைப்புலிகளுடனான தொடர்பு பற்றி விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

மலையகத்தில் உருவாகிவரும் புதிய சூழ் நிலை நாட்டை மேலும் சிக்கல் நிலைக்கு தள்ளும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது. -சி

# இலங்கை-இந்திய தொடர்பை புலிகள் அவதானிக்கிறார்களாம்

(கொழும்பு)

இந்தியாவுடன் இலங்கை அரசு ஏற்படுத்தியுள்ள தொடர்புபற்றி புலிகளின் பிரதிபலிப்பு என்ன என்பது குறித்து அரசியல் அவதானிகள், அவதானித்து வருவதாக 'சண்டே ஐலண்ட்' கூறியுள்ளது.

பங்களாதேஷ் சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இன்று இந்தியா செல்லவுள்ளார்.

அரசு தரப்பு வட்டாரங்கள் இதுபற்றி கூறுகையில், இந்தியாவுடன் இலங்கை அரசு தொடர்பு கொண்டுள்ளதற்கு புலிகள் எதிர்ப்பு எதனையும் தெரிவிக்கவில்லை எனக் கூறியுள்ளன. எனினும் இதுகுறித்து புலிகள் வெறுப்படைந்துள்ளதாக வேறு சில வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்தியாவுடன் இலங்கை அரசு கொண்டுள்ள தொடர்பு குறித்து புலிகள் அஞ்சத் தேவையில்லையென வெளியுறவு அமைச்சர் திரு.லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியா புறப்பட முன் கூறியிருந்ததும் தெரிந்ததே. சி

# தீர்வை முன்வைப்பதில் அரசுக்கு சிக்கல்

[கொழும்பு]

தமிழ்-சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சமாதானத் தீர்வை முன்வைப்பதில் அரசுக்கு ஒரு இக்கட்டான நிலை தோன்றியிருப்பதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன,

இவ்வாறான ஒரு தீர்வை முன்வைப்பது என்பது ஓர் எளிதான விடயமல்ல என்றும், வடபகுதியில் பெரும்பாலான பகுதிகள் புலிகளின் நிர்வாகத்தின்கீழ் இருப்பதால் அந்த நிர்வாகத்திற்கு ஒத்த ஒரு தீர்வை முன்வைக்க வேண்டிய ஒரு நிலைக்கு பொ.ச.மு.அரசு தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு தீர்வை சிங்கள மக்கள் விரும்புவார்களா? அல்லது இதற்குக் குறைந்த ஒரு தீர்வை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? என்பதே அரசின் சங்கடமான நிலையென்றும் தெரிவிக்கப்படுகிறது. சி

# காமினி கொலைச் சம்பவம் புலிகள் மீது குற்றம்சாட்ட போதிய ஆதாரங்களில்லை

(கொழும்பு)

காமினி திஸநாயக்கா உட்பட 57 பேர் பலியாகக்காரணமான கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பிற்கு விடுதலைப் புலிகள் சந்தேகம் தெரிவித்துள்ள போதிலும் இதுவரை அவர்களை புலிகள்தான் இந்தக் கொலைக்கு காரணம் என்பதை நிரூபிக்க எந்தவித ஆதாரத்தையும் பெறவில்லையென 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

இதுபற்றி பொலிஸார் தெரிவிக்கையில்; கொலைச்சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து கிடைத்த தடயங்கள் இரண்டாம் முறையாக ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதுபற்றிய அறிக்கைக்காக காத்திருக்கிறோம். அந்தமுடிவு வரும்வரை எந்த முடிவிற்கும் நாம் வரமுடியாதுள்ளது என்றனர்.

மற்றொரு பொலிஸ் அதிகாரி கூறுகையில்: காமினியின் கொலைச் சம்பவம் தற்போதைய நிலையில்மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தக் கொலை விசாரணையில் நாம் எட்டுமளவு தூரம் முன்னேற்றம் கண்டுள்ளோம். எனினும் இன்னும் பெருமளவு தூரம் முன்னேறிச்செல்ல வேண்டியுள்ளது என்றார்.

இதேவேளை காமினியின் குடும்ப நண்பரும் அவரது வழக்கறிஞருமான திரு. தயா பெரேரா கூறுகையில்: விடுதலைப் புலிகளுக்கு எதிராகவிரல் விட்டு சுட்டிக்காட்ட அரசு பயப்படுகிறது எனக் குற்றம் சாட்டியுள்ளார் இந்த விசாரணையில் இந்தியாவின் உதவியை பெறுவது போல் அரசு பாசாங்கு செய்து வருகிறதே ஒழிய உருப்படியான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளிற்கு இந்தியா, எந்த வகையில் தங்களது உதவி தேவை என இலங்கை வெளியுறவு அமைச்சிடம் கேட்டுள்ளதாம். எமது அரச எவ்வாறான உதவி தேவை என்பதை சரியாக தெரிவித்திருந்தால் இந்தியா இப்படியானதொரு கேள்வியை கேட்டிராது.

இந்தியாவிடம் இலங்கை வெளிவிவகார அமைச்சு என்ன உதவி கேட்டு கடிதம் அனுப்பியது? இந்தக் கடிதத்தை இவர்கள் பிரசுரித்தால் உண்மை நிலைதெரியும், டில்லியில் உள்ள எமது தூதர் அல்லது இங்குள்ள இந்தியத் தூதரிடம் இது குறித்து நேரடியாக பேசியிருக்கலாம். ஆனால் அரசு அவை செய்யவில்லை. இந்த விடயத்தை அரசு எவ்வளவு தூரம் 'சீரியஸாக' கருதுகிறது என்று தெரியவில்லை.

லலித் கொலை குறித்து விசாரணை நடாத்த 'ஸ்கொட்லண்ட்யாட்' குழு கொலை நடந்து நான்கு தினங்களில் இங்கு வந்துவிட்டது. ஆனால் காமினி கொலை நடந்து 40 நாட்களாகியும் இந்தியாவின் உதவி கிடைக்கவில்லையே எனவும் குற்றம் சாட்டியுள்ளார். சி

# முன்பிருந்த நிலைக்கு நாடு செல்கிறது

(கொழும்பு)

1977-ம் ஆண்டிற்கு முன்பிருந்த நிலைக்கு நாடு மீண்டும் செல்லும் துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க 'லங்காதீப' விற்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; பொதுசன ஐக்கியமுன்னணி பதவிக்கு வந்த மூன்று மாத காலத்துக்குள் அரசாங்கத்தினால் நடாத்தப்படும் சி. டபிள்யூ.ஈ. போன்ற ஸ்தாபனங்களில் பொருட்களிற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

77-ம் ஆண்டுக்கு முன்பு இருந்த காலத்தை போல் ஒரு நிலையை உருவாக்க தற்போதைய அரசு முயல்கின்றது.

தற்போதைய அரசாங்கத்தால் குறைந்த விலையில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு வகைகள் சில முதலாளிகளால் தொன் கணக்கில் கொள்முதல் செய்யப்பட்டு அவர்களின் களஞ்சிய அறைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்றார். ம சி

# படையினர்க்கு 1000 பாதுகாப்பு கவசம்

(கொழும்பு)

ஆயிரம் தொகுதி பாதுகாப்புக் கவசம் தமக்குத் தேவையென இராணுவம் பாதுகாப்பு அமைச்சிடம் கேட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்த களங்களில் துருப்புக்களை வழிநடத்தும் படையதிகாரிகளுக்கே இக் கவசம் பயன்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாதுகாப்பு கவசத் தொகுதியும் தலா 43 ஆயிரம் ரூபா பெறுமதியான 3.0கவசத் தொகுதிகள் உடன் கொள்வனவு செல்யப்படவுள்ளதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. க-சி

## பதவி உயர்வு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட காணிப் பதிவகத் திணைக்களத்தில் எழுதுவினைஞர்களாக கடமையாற்றி வரும் திருமதி என். செல்வராசாவும் திரு. கே. ஸ்கந்தராசாவும் எழுதுவினைஞர் சேவை வகுப்பு ஒன்றுக்கு பதவி உயர்வு பெற்றுள்ளனர். -154

# பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் பிரச்னைகள் எழுந்துள்ளது

## பீரிஸ் கூறுகிறார்

(சென்னை)

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாக கால அட்டவணையைத் தயாரிப்பதில்பிரச்னை ஏற்பட்டுள்ளதாகவும் மக்களின் உணர்வுகளை எதிர்க்கும் வகையில் செயற்பட அரசாங்கம் விரும்பவில்லையென்றும் அமைச்சர் ஜி, எல். பீரிஸ் 'புரண்ட்லைன்' சஞ்சிகைக்கு தெரிவித்துள்ளார்,

அவர் மேலும் கூறுகையில்: விடுதலைப் புலிகளுடன் நடாத்தவுள்ள பேச்சுவார்த்தைகள் குறித்த கால அட்டவணையை தயாரிப்பதில் பிரச்னை ஏற்பட்டுள்ளதால் அடுத்த கட்டப் பேச்சுக்கான திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை.

சமாதான பாதைமேடுபள்ளம் நிறைந்ததாக உள்ளது. ஜனாதிபதி சந்திரிகாவின் நோக்கு சமாதானமே. சமாதானத்திற்கான பயணம் இடர்பாடுகள் அற்றதாக அமையும் என எவரும் எதிர்பார்க்கமுடியாது எனவும் தெரிவித்தார். க-சி

## ஜனாதிபதியின் பத்திரிகைச் செயலர் ஸ்ரீலால்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பத்திரிகை செயலாளராக பிரபல வெகுசனத் தொடர்பாளர் சூலவன்ச ஸ்ரீலால் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவித்தது.

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதமராக இருந்த வேளையிலும் திரு. சூரவன்ச ஸ்ரீலால், பத்திரிகைச் செயலராகக் கடமை புரிந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. க-ரி

# புலிகளின் தற்போதைய ஆட்சி முறையை சமஷ்டி முறைத் தீர்வாக அங்கீகரிக்கலாம்

(கொழும்பு)

உண்மை நிலையை அங்கீகரிக்கும் ஒரு திருப்பு முனையை இலங்கை தற்போது அடைந்துள்ளது. பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என்று பல வருடமாக அரசியல் தலைவர்கள் கேட்டு வந்தனர். சாதாரணமாக பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்காக புலிகள் இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதனை தற்போது பலரும் உணர்ந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறு சண்டே ஐலன்டில ஜெகான் பெரேரா எழுதிய கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் அக்கட்டுரையில் தெரிவித்திருப்பதாவது:

சிலர், புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன் ஆயுதங்களை கீழ போடவேண்டுமென்பதில் விடாப்பிடியாக நிற்கிறார்கள். அதேவேளை வேறு பலர் இந்த பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என்று கருதுகிறார்கள். ஆனால் வெற்றிகரமான பேச்சுவார்த்தையின் முடிவில் புலிகள் தீர்வின் ஒரு பகுதியாக ஆயுதங்களை கீழே போடலாம். அது புலிகள் மேலோங்கிய நல்ல நிலையிலிருந்தே அதனை செய்யும் எண்ணம் புலிகளுக்கு இருக்கும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமிழ் மக்களிடையே பெரும் மதிப்பையும் நம்பிக்கையும் பெற்றுள்ளார் என்பதில் சந்தேகம் இல்லை. வடக்கில் நடைபெற்ற தேர்தலில் இவருக்கு அமோக ஆதரவு கிடைத்தது. இவரின் நேர்மையான பேச்சு ஆயுத படையினருடன் வாக்குவாதமும் ஏற்பட ஏதுவானது. இதனால் தமிழ் மக்களின் அன்புக்குரியவரானார்.

திருமதி சந்திரிகா தமிழ் மக்கள் சார்பாக சார்ந்து நிற்பார் என்பது அவரது திடமான நம்பிக்கை 1957ல் ஏற்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், 1965ல் ஏற்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தம், 1981இல் ஜெயவர்த்தனா அரசின் மாவட்ட அபிவிருத்தி சபைகள் போன்றவைக்கு ஏற்பட்ட கதி திருமதி சந்திரிகா கையொப்பமிடும் எந்தத் தீர்விலும் ஏற்பட இடமிருக்காது.

எனினும் ஜனாதிபதி சந்திரிகா ஒரு தனி மனிதர். அவரின் நிலை நிரந்தரமானதல்ல. அவரின் பின்னால் வருவோர் அவர்போல் திடகாத்திரமாகவும் உறுதியாகவும் இருப்பர் என்று சொல்வதற்கில்லை.

ஆகவே தமிழரைபொறுத்தவரை குறிப்பாக புலிகளை பொறுத்தவரை திருமதி சந்திரிகாவின் காலத்தில் ஏற்படுத்தப்படும் உடன்பாடு எவராலும்மாற்றமுடியாத வகையில் அமைதல் வேண்டும் என கருதுவர்.

விடுதலைப்புலிகள் சமாதான பேச்சு நடாத்தினாலென்ன நடக்காவிட்டாலென்ன தற்போதைய நிலை அவர்களுக்கு திருப்தியாக உள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அரசாங்கம் இதுகாலவரை அவர்கள் மீது மேற்கொண்ட போர் நடவடிக்கை தமிழ் மக்கள் அவர்களின் கீழ் ஒன்றிணையவே செய்தது. மேலும் திடீர் தாக்குதல் மூலம் ஆயுதப் படைகளிடம் புலிகள் ஆயுதங்களையும் கைப்பற்றிக்கொண்டனர்.

தற்போது சில பிரதேசம் அவர்களின் கீழ் உள்ளது. அவர்கள் ஆளுகிறார்கள். வரி விதிப்பு, பொலிஸ் மற்றும் நீதித்துறை சேவைகளை அவர்கள் நடத்தி வருகிறார்கள். இந்நிலையில் அவர்கள் ஆயுதங்களை கீழே போடமாட்டார்கள்.

ஆகவே அரசாங்கத்திற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று ராணுவ நடவடிக்கை மூலம் புலிகளை தோற்கடிக்கச்செய்து ஆயுதங்களைக் கீழே போட வைப்பது. இதற்கு தற்போதைய மெதுமையான தாக்குதலை நிறுத்தி முழு அளவிலான போர் ஒன்று தொடுக்க வேண்டும். இதனால் ஏற்படும் உயிர் இழப்பு, சொத்து இழப்பு பற்றி ஒன்றும் சிந்திக்காதளவுக்கு ஒரு சவாலை எடுக்கவேண்டும்.

இந்தப் பெரும் போர்நடவடிக்கையிலும் அரசு தோற்குமேயானால் அந்தப் பிரதேசத்தை உரிமைகோர அரசாங்கத்துக்கு தகுதி இல்லாமல் போகும். சர்வதேச மட்டத்திலும் அந்தப் பிரதேச மக்களாலும் ஏற்கப்படமாட்டார்கள். இப்படியான போரில் உயிர்ச்சேதம் அதிகமாக இடம்பெறும். மேலும் முழுமையான இப்போர் நடவடிக்கையினால் புலிகளை தோற்கடிக்க அரசு தவறும் பட்சத்தில் அதன் பிரதிபலன் ஒரு சுதந்திரமான தமிழ் ஈழம் உருவாகுவதாகவே அமையும்.

இரண்டாவது மாற்றுவழி தற்போதைய நடைமுறைச் சாத்தியமான சூழ்நிலைக்கேற்ப யாவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான வழியைக் கடைப்பிடித்தலாகும்.

உண்மை நிலை என்னவெனில் புலிகள் வட பகுதியை ராணுவ ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர், சமாதானத்திற்கு தடையாகவுள்ள இந்த நிலையை நன்மையடையக்கூடிய வழிக்கு எப்படிமாற்றிக் கொள்வதென்பதே தற்போதைய கேள்வியாகும்.

கடந்த பல வருடங்களாக இராணுவம் நகரமுடியாத நிலையில், புலிகள் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் படிப்படியாக உள்ளூர் ஆட்சியை அமைத்து மக்களின் அடிப்படை தேவையை பூர்த்தி செய்துவருகிறார்கள், இந்நிலையில் அரசாங்கம் நினைத்தால் நாடாளுமன்றச் சட்டத்தைக் கொண்டுவந்து இலங்கையை ஒரு சமஷ்டி முறைக்கு மாற்றலாம். இதன் மூலம் தற்போதைய அமைப்பை அங்கீகரிக்கலாம்.

வேறுவிதமாக சொல்வதாயின் புலிகள் அமைத்துள்ள நீதி நிர்வாகம், பொலிஸ் மற்றும் முறைகளை அப்படியே இருக்கச் செய்ய வேண்டும். மேலும் சமஷ்டி முறையிலான ஒரு ஆட்சியில் அந்த ஆட்சியாளர்கள் எடுக்கும் சில தீர்மானங்களை ரத்துச் செய்யும் உரிமையை மத்திய அரசு கொண்டிருக்காது.

இந்தச சலுகை மூலம் அரசாங்க செயற்பாடுகள் நேரடியாக புலிகளுக்கு போவதென்பதல்ல. பேச்வார்த்தை என்பது நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதும், பிரச்சனையை தீர்ப்பதும் அல்லாமல் லாபம் பெறுவதுமாக அமையும்.

அரசாங்கம் சட்டரீதியாக வழங்குபவைக்குப் பதிலாக புலிகளும் ஐக்கிய இலங்கை என்ற முறையை ஏற்று இன மோதல்களுக்கு வன்செயலை பிரயோகிப்பதில்லை என அரசுடன் இணைந்து போதல் வேண்டும்.

தீர்வு ஒன்று ஏற்பட்டு அது எந்த வகையிலும் மாற்ற முறுதபடி கண்காணிக்கப்படுதலோடு திரும்ப ஆயுதம் எடுக்கும் நிலைக்கு புலிகளும் அரசும் வரக்கூடாது அதாவது புலிகளுக்கு மேலும் ஆயுதம் கப்பலில் வெளியிலிருந்து வராது. அரசாங்கமும் பாதுகாப்புச் செலவினங்களை குறைத்து வரவு செலவில் துண்டு விழுவதினைக் குறைக்கலாம்.

பேச்சுவார்த்தையின் போது பல விடயங்கள் தீர்க்கப்பட வேண்டும்.

வடகிழக்கில் தேர்தல் நடத்துவது; வடகிழக்கில் போரிடும் போராளிகளை இராணுவத்தில் சேர்த்துக்கொள்வது; மேல்முறையீட்டு நீதிமன்றுக்கு மனுச்செய்தல் போன்றவை பேசப்படவேண்டியனவாகும்.

இலங்கை போன்ற ஒருநாட்டிற்கு சமஷ்டி ஆட்சியே சிறந்தது. சிறுபான்மை மக்கள் புவியியல் ரீதியாக வடகிழக்கில் கூடுதலாக வசிக்கிறார்கள். இந்த யதார்த்த நிலையை உணர்ந்து சூழ்நிலைக்கு ஏற்ப சட்டவாக்கம் அமைதல் அவசியம்.

இந்த நடைமுறையை கைக்கொள்வதால் பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கையில் ஏற்படும் உயிர் இழப்புகளை தவிர்க்கலாம். தற்போது நகரமுடியாத நிலையிலிருந்து கொண்டு வீணாக போகும் வழங்கள், உயிர்களை காப்பாற்றலாம் சமூக அமைதியின்மையில் நின்று விடுபடவும் இந்த மாற்றுவழியே சிறந்ததாகும். கே-சி

## சமாதானத்திற்கு கைகொடுக்க நல்ல தருணம் வருகிறது

(கொழும்பு)

தற்போது நிலவும் சமாதான நல்லெண்ணமுமநத்தார் புதுவருடம்அண்டிவரும்வேளையும் போப்பாண்டவரின் ஜனவரிமாத விஜயத்தையும்கருத்தில் கொண்டும் சமாதானத்துக்கு கைகொடுப்பது நல்ல தருணமாகும்.

இவ்வாறு பாதுகாப்பு ஆய்வாளர் 'சண்டே ஒப்சேவரில்' எழுதியுள்ளார்.

அவர் மேலும் அதில் தெரிவித்திருப்பதாவது:

பூநகரி-சங்குப்பிட்டி பாதையைத் திறந்து விடுவதான பேச்சும், வரப்போகும் சமாதானப்பேச்சில் இடம்பெறவுள்ளது. அரசாங்கம் ஒரு நல்லெண்ண அடிப்படையில் இந்த பூநகரி-சங்குப்பிட்டி பாதை திறந்துவிடவேண்டும். இந்த நடவடிக்கை, பூநகரியில் நிலைகொண்டுள்ள ராணுவத்தினரை திருப்திப்படுத்தாதுபோல் இருக்கிறது. எனினும் வேண்டுமாயின் யு. என். ஏச். சி. ஆர். இணைந்து முன்னைய அரசுடன் இது சப்பந்தமாக நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில இதனை மேற்கொள்ளலாம்.

போப்பாண்டவர் இங்கு வருவதனையடுத்து 10 ஆயிரத்திக்கும் மேற்பட்ட யாழ்ப்பாணக் கத்தோலிக்கர் கொழும்பு வரவுள்ளனர். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பாதையூடாக அவர்களின் போக்குவரவுக்கு அரசாங்கம் ஒருநல்ல ஏற்பாட்டை செய்யவேண்டும் இதுவே அரசின் நல்லெண்ண அடிப்படையைக்காட்ட ஒரு தகுந்த தருணமாகும்.

இத்தீவில் பிரிந்து இருக்கும் சமூகங்களிடையே ஏற்பட்டுள்ள புண்காயத்திற்குபோப்பாண்டவரின்விஜயம் எண்ணை தடவுவதாக அமையட்டும் ஒற்றுமையை ஏற்படுத்த பல காததூரம் நடக்கவேண்டி இருந்தபோது இதுஒரு முதல் படியாக அமையட்டும்என்றும் அவர் மேலும் அதில் எழுதியுள்ளார். -கே-சி

## ஹொங்ஹொங் பொலிஸார் இலங்கை வந்தனர்

(கொழும்பு)

ஹொங்கொங்கைத் தளமாகப் பாவித்து வெளிநாட்டவர் பலருக்கு போலக் கடவுச் சீட்டுக்களை வழங்கி வருவது தொடர்பான பிரச்னைகளுக்கு இலங்கைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர்க்கு உதவுமுகமாக கொங்கொங் பொலிஸ் குழு ஒன்று இங்கு வந்துள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இரண்டு சிங்கப்பூர்

(5ம் பக்கம் பார்க்க)

## அரசு புலிகள் சமானப் பேச்சில் இந்தியா தலையிடக் கூடாது

(கொழும்பு)

இலங்கைஅரசுக்கும்விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடக்கும் சமாதானம் பேச்சு விடயத்தில் இந்தியா தலையிடாது விலகிக்கொள்ள வேண்டுமென சிங்கள வார இதழான 'யுக்திய' தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது

அது மேலும் கூறுகையில்: விடுதலைப்புலிகள் ஜனநாயக முறையிலான தேர்தலை சந்திப்பதற்கு ஒரு வருடங்களிற்கு மேல் அவர்களுக்கு நாம் ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

இலங்கை விவகாரத்தில் இந்தியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தனது சொந்த நலனுக்காக இலங்கை விவகாரத்தில் தலையிட்டு இந்த பிரச்னையை குழப்பக்கூடாது.

இந்நிலையில் விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை இந்தியாவிற்கு நாடு கடத்துமாறு கோரப்பட்டால் அது நிலைமைகளை மோசமாக்குவதுடன் மீண்டும் புலிகளை யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது பலமான கோட்டைகளுக்குள்ளும் காடுகளுக்குள்ளும் செல்லும் நிலையை தோற்றும். மேலும் பெரும் இரத்தக்களரியை ஏற்படுத்துவதுடன் பெரும் அழிவையும் பின்னடையும் ஏற்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளார். (சி)

## ரோகண குடும்பத்தவர் இங்கிலாந்து செல்வர்

(கொழும்பு)

ஜே. வி. பியின் முன்னாள் தலைவரான ரோகண விஜேவீராவின் மனைவியும் பிள்ளைகளும் இங்கிலாந்து செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன என்று விஜேவீராவின் மைத்துனரான டாக்டர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்ததாக 'சிலுமின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவர்களுக்கு பிரித்தானிய விசா எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு, இவர்கள் இங்கிலாந்திலுள்ள அவர்களது வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உண்மையான ஜே. வி. பி. யார் என்பதை தீர்மானம் செய்வது மக்கள் என்றும் இருந்தபோதும் உண்மையான ஜே வி. பியின் தலைவர் தான்தான் என்றும் சந்திரா பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். ம சி

## கிணற்றில் விழுந்து குடும்பஸ்தர் மரணம்

(பளை)

நேற்று முன்தினம் பளைப் பகுதியிலுள்ள புலோப்பளை என்னும் இடத்தில் கிணற்றில் விழுந்து ஒருவர் மரணமானார். அதேஇடத்தைச் சேர்ந்த கோபாலபிள்ளை இளையதம்பி வயது (40) ஆறுபிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மரணமானார்.

இவர் கடந்த சில நாட்களாக மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுபத்து மலேரியா குளிகைகளையும் ஒரே நேரத்தில் உட்கொண்டதினால் மூளையில் ஏற்பட்ட பாதிப்பால் இவர் கிணற்றில் விழுந்து மரணமானார் என கூறப்படுகின்றது. இதுதொடர்பாக காவல்துறையினர் விசாரணைகளை நடாத்திவருகிறார்கள். 155-சி

### மணிவாக்கு

முன் யோசனையுள்ளவன் வெளியே வருவதற்கும் வழியைத் தெரிந்து கொண்டு தான் உள்ளே நுழைவான்.
- அரேபியப்பழமொழி

# புலிகளின் பிடியிலுள்ள பகுதிகள் அபிவிருத்திசெய்யப்படாது

(கொழும்பு)

வடக்கு.கிழககில் புலிகளின் பிடியிலுள்ள பகுதிகளில் அபிவிருத்தி எதனையும் அரசு தற்போதைக்குச் செய்யும் சாத்தியங்கள் இல்லை எனக் கூறப்படுகிறது.

புலிகள் வசமுள்ள பகுதிகளில் அரச அபிவிருத்திகளை மேற்கொள்ளும்போது புலிகள் இராணுவ ரீதியாக இல்லாவிடினும் பொருளாதார ரீதியில் தமது வளங்களை நன்கு அபிவிருத்தி செய்துவிடுவார்கள் என அரசு தரப்பினர் நம்புகிறார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இவ்வாறான அரசின் கட்டுப்பாடுகள் உதவுமெனவும் அரசு தரப்பு நம்புகிறது. இதே வேளை தற்போது புனர்வாழ்வு புனர் நிர்மாண அமைச்சினால் கிழக்கில் குறிப்பாக முஸ்லிம்களுக்கு மட்டுமே நிவாரண உதவிகள் கோடிக்கணக்கான ரூபா செலவில் வழங்கப்பட்டு வருகிறது. வடபகுதியிலிருந்து வெளியேறிப் புத்தளத்தில் தங்கியுள்ள முஸ்லிம் அகதிகள் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் கடந்த இரு மாதங்களில் ஐம்பதினாயிரம் ரூபாவிற்கும் மேற்பட்ட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் வடபகுதியிலுள்ள லட்சக் கணக்கான தமிழ் அகதிகளுக்கு உலர் உணவு நிவாரணத்தை தவிர எதுவுமே வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## நமது நோக்கு

இயற்கையா? செயற்கையா?

தருமி என்ற ஏழைப் புலவன் இறைவன் கொடுத்த பாடலைக் காட்டி அரச சபையிற் பொற்கிழி பெற்றான். அப்பாடலிற் குற்றம் உண்டு என்று வாதிட்டான் நக்கீரன் என்ற அரசவைப் புலவன்.

அவனின் வாதத்தின் கருப்பொருள் பெண்கள் கூந்தலின் நறுமணம் இயற்கையானதா? செயற்கையானதா? என்பதே!

இன்று - தென்னிலங்கையின் பொருளாதாரத்தில் இத்தகைய விவாதம் ஒன்று சூடுபிடித்திருக்கிறது.

அதாவது - சீனி, பருப்பு போன்ற சில அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு இயற்கையானதா அல்லது செயற்கையானதா என்பதே.

மழை வெள்ளம் போன்ற இயற்கை அழிவுகளால் உற்பத்தி பாதிக்கப்பட்டு அதனாற் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவது இயற்கையானது

அல்லது - அரசின் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தகத்தின் தவறுகளால் பொருட்களின் விலைகள் கட்டுமீறப் போவதும் இயற்கையானது.

ஆனால் - ஒருசில முதலாளிகள் வேண்டுமென்றே பொருட்களைப் பதுக்கி வைத்துவிட்டு, செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கிவிட்டு, விலைகளை ஏற்றிக் கொள்ளை இலாபம் அடிப்பது குற்றச் செயலே.

சந்தைப் பொருளாதாரத்தில், அரசின் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருக்கும் வேளையில், மக்களைப் பாதிக்கும் இத்தகைய செயல்கள் கண்டனத்திற்குரியவை.

செயற்கைத் தட்டுப்பாடு ஏன், எப்படி ஏற்பட்டது என்பதை அரசு விசாரித்து வருகிறது.

இத்தகைய செயற்கைத் தட்டுப்பாட்டை கொள்ளை இலாபத்திற்கு மாத்திரமல்லாது வேறு நோக்கங்களுக்கும் ஏற்படுத்துகிறார்களா? அரசியல் நோக்கம் உண்டா?

இன்றைய அரசில் சமசமாசக் கட்சி, பொதுவுடமைக் கட்சி, நவசமசமாசக்கட்சி போன்ற தீவிர இடதுசாரிக் கட்சியினர் இடம் பெற்றிருக்கிறார்கள்.

அத்தோடு - ஜனாதிபதி சந்திரிகாவும் இடதுசாரிப் போக்குடையவர் என்பதும் தெரிந்த சங்கதியே.

அதற்காக - செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கி, அரசுக்குப் பாடம் படிப்பிக்க வேண்டும் என்ற நோக்கோடு செயற்படுவது, மக்கள் வயிற்றில் அடிப்பது குற்றமே!

## பலதும் பத்தும்

பிளந்துவிடுக!

வளவிற்குள் .... பட்டுப்போன தென்னை மரக்குற்றிகளை அப்படியே விட்டுவிடாதீர்கள்; பிளந்துவிடுங்கள்.

எதற்காகவா? தென்னை மரக்குற்றிகளுக்குள் கருவண்டு உற்பத்தியாகுமாம். தென்னை மரங்களையே அழிக்கும் இந்தக் கருவண்டுகளின் உற்பத்திக்கும், வளர்ச்சிக்கும் நாம் உதவ வேண்டுமா?

வேலிகளில் இக்குற்றிகளைப் பாவித்தால் மேற்பகுதிகளில் தாரைப் பூசி விடுங்கள். அதேபோலத் தென்னை வட்டுக்களிலும் இவற்றைக் கண்டால் திரவத் தாரைப் பாவித்துப் பாருங்கள். அதன் மணத்தைச் சகிக்காது அகன்றுவிடும். அதற்கும் கட்டுப்படாவிட்டால்......? பூச்சிகொல்லிகளை விசிறித்தான் அழிக்கவேண்டுமாம்!

ஏனெனில்... கருவண்டின் இன்னொரு பயங்கரமான பெயர் காண்டா மிருக வண்டு!

—மயூரன்

# பெரும் போர் மூளும்;
## பொருளியல் நிபுணர்கள் கருத்து

(கொழும்பு)

இனப்பிரச்னைத் தீர்வுக்கு புதிய அரசு பல முயற்சிகளில் இறங்கியுள்ளதாகக் கூறப்பட்டுள்ள போதிலும் சர்வதேச சமூகத்தவர் இலங்கையில்மீண்டும் 'பெரும் போர் மூளும்' அபாயம் தொடர்வதாகவே கருதுகின்றனராம்.

இனப்பிரச்னைக்கான தீர்வில்லையேல் பொருளாதார அபிவிருத்தி தங்கியுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியுறும் பட்சத்தில் இராணுவத் தீர்வு முனைப்புக்கே அது இட்டுச் செல்லும் என்பதால் பெரும் போரொன்று மூளும் அபாயம் ஏற்படலாம் என 'ஜோன்கீல்ஸ்' கம்பனிப் பணிப்பாளர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளும் தற்போது இலங்கை நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றனவாம். -சி

### இளம்பெண் மரணம்

(நெல்லியடி)

மூளைக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண்மணி ஒருவர் கடந்த வாரம் யாழ் போதனா வைத்தியசாலையில் மரணமானார்.

புலோலி கிழக்கு சந்தா தோட்டத்தைச் சேர்ந்த திருமதி விவேகானந்தம் வசந்தராணி (வயது 40) என்னும் இரு பிள்ளைகளின் தாயே இவ்வாறு மரணமடைந்தவராவார். 160

### ஹொங்ஹொங்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

பிரஜைகளைக் கைது செய்து விசாரித்தபோது இந்த சர்வதேச ஏமாற்றுவலை கண்டறியப்பட்டது.

இதேவேளை போலிப் பிரிட்டிஷ் கடவுச் சீட்டுடன் இரண்டு சீனப் பிரசைகள் கொங்கொங் இலங்கை ஊடாக பஹரின் சென்றபோது அங்கிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களும் இலங்கை பொலிசாரினால் கைதாகியுள்ளனர்.

தற்போது இப்போலிக் கடவுச் சீட்டு தயாரித்து விநியோகித்துவரும் ஒரு வெளிநாட்டுக் குழுவினர் பற்றி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அறியப்பட்டு அவர்களை தேடி கண்டு பிடிக்கும் வேலையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

(கே-சி)

### அரசு— புலிகளுக்கிடையில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் புலிகளுக்கு ஆயுதம் ஏற்றிக் கொண்டு வருகிறது என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை என உறுதிப்படுத்தப்படாத செய்திகள் கூறுவதாகவும் அப்பத்திரிகை கூறியுள்ளது. -சி

## இராசி பலன்

07 - 12 - 1994

புதன்கிழமை

(தமிழுக்குகார்த்திகை21)

பஞ்சமி இரவு 9-05 வரை: திருவோணம நள்ளிரவு 12-37 வரை. சித்தயோகம் இராகு காலம் நண்பகல் 12-16 முதல் 1-43 வரை: சுபவேளை 8-52 முதல் 9-34 வரை:

மேடம்: நண்பர் ஆதரவு, காரிய சித்தி, விருந்துபசாரம்.
இடபம்: நிர்ப்பந்தம், வீண் செலவு, மனஸ்தாபம்.
மிதுனம்: வீண் ஆலோசனைகள், உடலசதி, மனத்தாங்கல்.
கடகம்: தொழில்பெருமை, உறவினர் நன்மை, பயணம்
சிங்கம்: வீண் அவஸ்தை, குடும்பக் கஷ்டம், சோம்பல்
கன்னி: புத்திரர் கவலை, காரியத் தடை, வைத்தியச செலவு
துலாம்: வழியில் இடையூறு, அதிகாரிகள் துயர், அலைச்சல்
விருச்சிகம்: விசித்திர எண்ணம், குடும்ப சுகம், பிறர் உதவி
தனுசு: தொழில் சங்கடம், தலைகுனிவு, பணமுடை
மகரம்: துணிச்சலான செயல், பாராட்டு, தெய்வீக செலவு
கும்பம்: முரண்பாடு, முதியோர் கவலை, அகால உணவு
மீனம்: கேள்வி ஞானம், பிரச்னைத் தீர்வு, பொது நோக்கு

ஜோஸ்யர்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994—12—07

புதன் இரவு

| | |
|---|---|
| 08-01 | குயிலோசை - நிகழ்ச்சியில் ச. வே. பஞ்சாட்சரம் எழுதிய ''மண்ணை மயக்கும் இன்பங்கள் துன்பங்கள்'' கிராமியநிகழ்வு |
| 08-20 | ஏர் முனை - நிகழ்ச்சியில் ''மர்முந்திரிகை'' சித்திரம் |
| 08-30 | செய்திகள் |
| 08-40 | நாடகம்- மலரன்னை எழுதிய ''புரிந்துணர்வு'' |
| 09-00 | இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும் |

1994—12—08

வியாழன் காலை

| | |
|---|---|
| 07-02 | மாவீரர் வணக்கம் |
| 07-15 | விடுதலைக் கீதங்கள். |
| 07-30 | செய்திகள் |
| 07-35 | பத்திரிகை செய்திகள் |
| 07-40 | விடுதலைக் கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி |
| 08-00 | காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும் |

# அந்தியேட்டி அழைப்பும் 31ம் நாள் நினைவஞ்சலியும்



அமரர் சுப்ரமணியம் தியாகலிங்கம்
(ஒய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர் கிளிநொச்சி)

தாயின் மடியில் 19-03-1937 ஆண்டவன் அடியில் 07-11-1994

அன்புமிகு மகனாய், ஆசை மருமகனாய், பண்பு நிறைந்த கணவராய், பாசம் மிகுந்த தந்தையாய், நேசம் மிகுந்த சகோதரனாய், அறிவுரை கூறும் மைத்துனராய், கடமை கண்ணியம் நிறைந்த பாவலனாய் இப் பூவுலகில் வாழ்ந்து 57வது வயதில் இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் சுப்ரமணியம் தியாகலிங்கம் அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலியிலும், மதிய போசனத்திலும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தாய், மனைவி, மக்கள்.

917, திருநகர்,
கிளிநொச்சி.

(எ-4571)

மழைநீரை சேமித்து வைப்பாய்—என்றும்:
மண்வளம் செழிக்க நிமிர்ந்து நிற்பாய்

# சமாதானத்துக்காக நாம் நீண்ட தூரம் செல்லவேண்டும்

## பாரிஸில் வணபிதா இம்மானுவேல்

(பாரிஸ்)

சமாதானத்துக்கு நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டும் சமாதானம் வந்து விட்டது என்ற எண்ணத்தில் நாம் நடத்தும் போராட்டத்தை நிறுத்தி விடாமல் இன்னும் மும்முரமாக நாம் ஒருமைப்பட்டு செயல்பட வேண்டும். இவ்வாறு வண. பிதா. எஸ் ஜே. இம்மானுவேல் தெரிவித்தார்.

பாரிஸ் நகரில், 'பெற்ற போரும் சமாதானமும்' என்ற கருத்தரங்கில்கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையிலே போர் முடிந்த பின்னரும் தமிழ் மக்களுடைய போராட்டம் தொடர்ந்து நடைபெறும் போர் சிங்கள மக்களால் எம் மீது திணிக்கப்பட்டதே ஒழிய நாம் தொடங்கிய போரல்ல. அரச படைகளின் அட்டூழியங்களினுலே எமது இளைஞர்கள் ஆயுதங்களைத்தூக்கி வந்தார்கள்.

போரைத் தொடங்கியவர்களே அந்தப் போரை முடித்து வைக்கவேண்டும். எம்மை நோக்கி வந்த போருக்கே நாம் முகம் கொடுத்தோம். மக்களையும் மண்ணையும் பாதுகாக்கவே நாம் போர் செய்கிறோம்.

வடக்கு - கிழக்கில் இடம் பெற்றுவரும் போராட்டத்துக்கு வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும்.

உடனடியாக சமாதானம் வந்துவிட்டது என்று கூறமுடியாது, சமாதானத்துக்கான ஆயத்தங்களே இன்று நடைபெறுகின்றது. சமாதானம் என்ருல் தடைப்பட்ட பொருட்கள் யாழ்ப்பாணத்துச்கு வந்துவிட்டால் பாதை திறந்து விட்டால் குண்டு விழாமல்விட்டால் போதும் என எண்ணும் தமிழர்களும் இருக்கிருர்கள்.

சண்டை நடைபெருத நிலைமைதான் சமாதானம் என்று கருதக்கூடாது மத்தியில் உண்மையான தொடர்பு மனித மதிப்புடனுன தொடர்பு ஏற்படமுடியுமோ அன்று தான் உண்மையான சமாதானம் ஏற்பட்டுவிட்டதாக கருதமுடியும். என்றும் அவர் மேலும் தெரிவித்தார். -ரி

# இ. தொ. கா.வின் 9 எம். பி.க்களும் பதவி இழக்கும் நிலை ஏற்படலாம்

(கொழும்பு)

தொண்டமான் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் தெரிவு செய்யப்பட்ட 9 எம். பிக்களையும் ஐக்கிய தேசியக் கட்சிலிருந்து நீக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் செயலர் குழு கட்சித் தலைமைப் பீடத்தை அவசரமாகக் கோரியுள்ளது.

இவர்களைக் கட்சியிலிருந்து நீக்கிவிட்டு, இவர்களுக்கு அடுத்ததாகக் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களை, அவர்களது இடத்திற்கு எம். பி.க்களாக நியமிக்கவேண்டும் என்றும் செயற்குழு தமது கோரிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

மேற்படி 9 எம். பி.க்களும் அண்மையில் நாடாளுமன்றில் நடந்த 'மினி பட்ஜெட்'டில் பொதுசன ஐக்கிய முன்னணக்கு ஆதரவாகச் செயற்பட்டு, ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசியல் ரீதியாக நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டனர். இ. தொ. கா. - ஐ. தே. க. இடையிலான தேர்தல் ஒப்பந்தத்தில், இரு கட்சிகளும் மற்றக் கட்சிக்கு எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாத வகையில் நடந்துகொள்ள வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், இ தொ.கா. அதனை மீறிவிட்டதாகவும் ஐ.தே.க. செயற்குழு கட்சித் தலைமைப் பீடத்திற்குச் சுட்டிக் காட்டியுள்ளது

இதன் மூலம் மேற்படி 9 எம். பி.க்களும் தமது பதவிகளை இழக்கும் சூழ்நிலை ஏற்படலாமெனக் கருதப்படுகின்றது. சி-ரி

# காயமடைந்தபடையினர்க்கு அமெரிக் அரசு உதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் போரில் காயமடைந்து ஊனமுற்ற படை வீரர்களின் புனர்வாழ்வுக்கென, அமெரிக்க அரசாங்கம் உதவிகளை வழங்க முன் வந்துள்ளது.

இதற்கென அமெ. அரசு 50 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான வைத்திய உதவிகளையும் வழங்கியுள்ளது.

6 அம்புலன்ஸ் வண்டிகள் உட்படப் பல மருத்துவ உபகரணங்கள் இந்த உதவித் திட்டத்தில் அடங்கும்.

அடுத்த வாரம் இவற்றை அமெரிக்க அரசு சிறிலங்கா இராணுவத்திடம் கையளிக்க இருப்பதாக இராணுவ வைத்திய ஆலோசகர் ஜெனரல் சி. துரைராஜா தெரிவித்துள்ளார். -இ

ஒன்பது மாதங்களில்

# மலேரியா நோயினுல் 37 பேர் உயிரிழப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனு வைத்திய சாலையில் கடந்த செப்டம்பர் மாதம் வரையான ஒன்பது மாதங்களில் மலேரியா நோயினுல் 37பேர் உயிரிழந்துள்ளார்கள்.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் வரையான ஒன்பது மாதங்களில் 2679 பேர் மலேரியா நோயினுல் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ் குடாவில் வடமராட்சி கிழக்கில் மலேரியாவின் பாதிப்பு அதிகமாக இருப்பதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். [ரி]

# ஜெர்மனியில் தினமும் 45 பேர் தற்கொலை

(லண்டன்)

ஜெர்மனியில் தினமும் 45 பேர் தற்கொலை செய்துகொள்வதாக, தற்போது அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

ஜெர்மனியில் தினமும் 41 நிமிடத்திற்கு ஒருவர் தற்கொலைசெய்கின்றனர். 1993ம் ஆண்டில் ஜெர்மனியில் 12,690 பேர் தற்கொலை செய்தனர். 1992ம் ஆண்டில் 13,458 பேர் த கொலை செய்துள்ளனர்.

1994ம் ஆண்டு தற்கொலை செய்துகொண்டவர்களின் தொகை, கடந்த காலங்களை விடக் கூடுதலாக இருக்கும் என்று ஜெர்மன் அரசாங்கம் வெளியிட்ட புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. வி-ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாவம் 07-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post OfficeSri uLanka nder Licence Number B/16336/B-

அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விற்பனவு திணைக்களம் பொதுசன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்ததும் செயற்கை உணவுத் தட்டுப்பாட்டை நாடு முழுவதிலும் ஏற்படுத்தி புதிய அரசு மீது மக்கள் வைத்திருந்த நல்லெண்ணத்துக்கு மாசு கற்பிக்கும் முகமாகவே இத் திணைக்களகத்தின் முக்கிய அதிகாரிகள் திட்டமிட்டு செயல்பட்டுள்ளார்கள்.

ஜனுதிபதித் தேர்தல் முடிவடைந்ததும், மேற்படித் திணைக்களத்தில் இருந்த பெருந்தொகையான உணவுப் பொருட்களை அவசர அவசரமாக, ஐ. தே. கட்சியின் ஆதரவாளர்களான பெரும் வர்த்தகர்களுக்கு விற்பனை செய்ததுடன், வெளிநாடுகளில் இருந்து அண்மையில் இறக்குமதிசெய்யப்பட்ட பெருமளவு உணவுப் பொருட்களையும் மக்களுக்கு விநியோகம் செய்யாமல் கொழும்புக்கு வெளியேயுள்ள பல களஞ்சியங்களிலும் பதுக்கி வைக்கப்பட்டது.

ஜனுதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு கிடைத்த ரகசியத் தகவலின் நிமித்தம் ஜனுதிபதியினுல் நியமிக்கப்பட்ட உயர் அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளில் இது தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனைகளின் போது பல வர்த்தகர்கள் பெருந்தொகையான உணவுப் பொருட்களைப் பதுக்கிவைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போதியஅளவு மா, சீனி, அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் 4 மாதங்களுக்குத் தேவையானவை கையிருப்பில் இருப்பதாக உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட நேற்று பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார். வி-ரி

காமினி கொலை விவகாரம்:

# புலன் விசாரணையில் இந்தியா உதவ முடிவு

[கொழும்பு]

காமினி திஸாநாயக்காவின் கொலை சம்பந்தமான புலனுய்வு விசாரணைகளில் இலங்கைக்கு உதவ இந்தியா முடிவு செய்துள்ளது.

இந்தியா தனது இந்த முடிவை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் தெரிவிக்கும் எனஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

திரு. லக்ஷ்மன் கதிர்காமர் இப்போது இந்தியாவில்தனது விஜயத்தை மேற்கொண்டுள்ளார் என்பது தெரிந்ததே.

அமைச்சர் கதிர்காமர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பேச்சுவார்த்தைகளின் பின்பு, திரு. கதிர்காமர் எதிர்க்கட்சித் தலைவர்களையும் அரச அதிகாரிகளையும் தனித் தனியாக சந்தித்து பேச்சுக்களையும் நடாத்தவுள்ளார்.

ஜனுதிபதி திருமதி சந்திரிகாவின் விசேட செய்தியை, திரு. கதிர்காமர் இன்று பிரதமர் நரசிம்மராவிடம் உத்தியோகபூர்வமாக கையளிப்பார். (வி)

புலிகளுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்வதை முன்னிட்டு யுத்தநிறுத்தம் ஒன்றை செய்துகொள்வதற்கு அரசும் விடுதலைப்புலிகளும் இணங்கியுள்ளனர். அத்துடன் ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கு விடுதலைப் புலிகளின் ஆதரவையும ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள அரசு முடிவுசெய்திருப்பதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன,

நேற்று நடைபெற்ற பாதுகாப்புச்சபை கூட்டத்தில்இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடபகுதியிலுள்ள கத்தோலிக்க மக்கள் பரிசுத்த பாப்பரசரைத் தரிசிப்பதற்குஇலகுவானவழியில் கொழும்பு வருவதற்காகவே ஆனையிறவுப் பாதை திறக்கப்படவுள்ளது.

இதேவேளையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை கூடிய விரைவில் மீண்டும் ஆரம்பிக்கவே ஜனுதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா விருப்பமாக உள்ளார். இதன் மூலமாகவும் வடபகுதியிலுள்ள தமிழ் கத்தோலிக்க மக்கள் பரிசுத்த பாப்பரசரை இலகுவாக வந்து சந்திக்க ஏற்பாடுகளைச் செய்யவும் ஜனுதிபதி தயாராகவுள்ளார்.

பரிசுத்த பாப்பரசரின் வருகையை அடித்தளமாகவைத்து ஒரு மாத காலத்துக்குள் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்து சமாதானத்துக்கு அடித்தளம் இடுவதற்கே ஜனுதிபதி முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிருர்,

அரசு அறிவிககவிருக்கும் யுத்த நிறுத்தம், பரிசுத்த பாப்பரசரின் விஜயத்துக்காக மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்காது. அது ஒரு நிரந்தர யுத்த நிறுத்தமாகவே இருக்கும்.

அரசாங்கத்தின் இந்த முயற்சிகளுக்கு, விடுதலைப் புலிகளின் ஆதரவும், ஒத்துழைப்பும் கிடைக்குமென அரசாங்கம் நம்பிக்கையுடன் இருக்கிறது.

ஆனையிறவப் பாதை திறக்கப்படும் பட்சத்தில் அதனூடாகப் பயணம் செய்யும் தமிழ்மக்களை இராணுவம் சோதனையிடக்கூடாது என விடுதலைப் புலிகள் நிபந்தனை ஒன்றை விதித்துள்ளதாகவும் தெரிகிறது.

ஆனுல் இராணுவத்தினர் இத்தகைய நிபந்தனையை விரும்பமாட்டார்கள். தமது முகாமைத் தாண்டும் எவரையும் சோதனையிடாது அனுப்ப அவர்கள் இணங்கமாட்டார்டார்கள்.

எனினும் இதுபாரதூரமான பிரச்னையாக இருக்காது. ரனெனில் சம்பந்தப்பட்ட இரு பகுதியினரும் சமரசமாகக் கலந்துரையாடி, இதுவிடயத்தில் ஓர் இணக்கமான தீர்வுக்கு வரமுடியும் என ஏஜென்ஸிச் செய்திகள் மேலும் தெரிவித்தன. இ-ரி

யாழ். மாவட்டத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற மாதம் 25ம் திகதி வெளியிடப்பட்ட அரசவர்த்தமானியின் வெளியீட்டின்படி பின்வருவோர் யாழ். மாவட்டத்துக்கான சமாதான நீதவானுக நியமிக்கப்பட்டுள்ளார்கள். திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் (கொக்குவில்), திரு. எஸ். கந்தசாமி (சாவகச்சேரி) திரு. ரி. ஜெயரத்தினம் (கல்வியங்காடு), திரு. வி. ஆறுமுகசாமி (பருத்தித்துறை), திரு. சிதம்பரப்பிள்ளை சண்முகம் (உடுப்பிட்டி), திரு. எஸ்.எஸ். வரதராஜா (யாழ்ப்பாணம்) திரு. வி. இராசையா (சுன்னுகம்) (162-ரி)

வாழைச்சேனையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது

வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டவர்களை ஏற்றிக்கொண்டு சென்ற படகு மீது படையினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டனர்.

திருமதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசு பதவியேற்ற பின்னர், 11 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டது இதுவே முதல் தடவையாகும்

கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது. மட்டு. வாவி அண்மையில் பொது மக்களின் பாவனைக்கு தடைசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. -ரி

சுவிஸில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுதிய கடிதத்துக்கு அமைச்சர் அனுப்பியுள்ள பதில் கடிதத்திலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

1990ம் ஆண்டுமுதல் 1992ம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் வந்தவர்களது விண்ணப்பங்கள் தற்போது பரிசீலனை செய்யப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்

இதேவேளை அண்மையில் சுவிஸிலிருந்து இலங்கைக்கு திரும்பிச்செல்ல இருந்ததாகக் கூறப்படும் ஏழு இலங்கைத் தமிழ் அகதிகளினதும் பயணம் இரத்துச்செய்யப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன, -ரி

கிராண்ட்பாஸ்

1ம் பக்கத் தொட ச்சி)

யில் நேற்றுக்காலை நடைபெற்றபோது இந்தத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

குற்றப் புலனுய்வு அதிகாரி அசோகா விஜேசிங்கவிடம் அரசாங்க சார்பில் ஆஜராகும் சிரேஷ்ட அரச சட்டத்தரணி அநுரா மெத்தெகொடவும் காலஞ்சென்ற காமினி திஸாநாயக்கா உரையாற்றிய கூட்ட நிகழ்வுகள் படமாக்கப்பட்ட மூன்று வீடியோ நாடாக்களும் அதிகாரிகளுக்கு இன்னும்கிடைக்கவில்லையென்று தெரிவித்தார்.

குற்றப்புலனுய்வு நிபுணர்களைக் கொண்டகுழு இவ்வாரம் இந்தியாவுக்குச் சென்று இந்திய நிபுணர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ள இருப்பதாகவும் அநுராமெத்தெகொட கூறினுர்.

விசாரணை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் பின்போடப்பட்டுள்ளது. (இ-ரி)